www.papercollection.wordpress.com



# JABATAN PELAJARAN NEGERI NEGERI SEMBILAN DARUL KHUSUS

## PRAPENILAIAN MENENGAH RENDAH 2012 33/1

**BAHASA TAMIL**
**தமிழ் மொழி**
**KERTAS 1**
**தாள் 1**
**Ogos 2012**
**1 JAM**
**1 மணி**

---

JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU

**(அறிவிக்கும் வரை வினாத்தாளைத் திறக்காதே)**

1. Kertas soalan ini mengandungi **40** soalan

   (இவ்வினாத்தாள் நாற்பது கேள்விகளைக் கொண்டுள்ளது)

2. Jawab **semua** soalan

   (எல்லாக் கேள்விகளுக்கும் விடையளி)

3. Tiap-tiap soalan diikuti oleh tiga cadangan jawapan **A,B,C** atau empat cadangan jawapan **A,B,C,D.** Bagi setiap soalan, pilih satu jawapan sahaja dan hitamkan jawapan anda pada kertas jawapan objektif yang di sediakan.

   (ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று (A,B,C) அல்லது நான்கு (A,B,C,D) பரிந்துரைக்கப்பட்ட விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் தெரிவு செய்து கொடுக்கப்பட்டுள்ள விடைத்தாளில் கருமையாக்கவும்.

---

Kertas soalan ini mengandungi **22** halaman bercetak **(Lihat Sebelah)**

33/1 © Hak Cipta Jabatan Palajaran Negeri Sembilan 2012

www.papercollection.wordpress.com


 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan

www.papercollection.wordpress.com


<u>பொதுக்கட்டளை:</u>

இக்கேள்வித்தாள் **அ,ஆ,இ,ஈ** என்னும் நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் **40** கேள்விகள் உள்ளன. எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : மொழியணிகள்**
**[ கேள்விகள் 1 - 12 ]**

வினாவுக்குத் தூண்டல் பகுதி கொடுக்கப்பட்டிருந்தால் அதில் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களைக் கவனமாக ஆய்ந்து, **மிகச் சரியான** விடையைத் தெரிவு செய்க.

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கேற்ற **மரபுத்தொடரைத்** தெரிவு செய்க.




**A** அளவளாவுதல்

**B** பாட்டு வாங்குதல்

**C** இடித்துரைத்தல்

**D** கங்கணம் கட்டுதல்

www.papercollection.wordpress.com


2. கீழே கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கேற்ற **இணைமொழியைத்** தெரிவு செய்க.

தமிழறிஞர் உ.வே. சாமிநாத ஐயர் தமிழ்மொழியின்பால் ஆழ்ந்த அன்புகொண்டவர். அவர் தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சென்று ஓலைச் சுவடிகளைச் சேகரித்தார். பழைய இலக்கியங்களைப் புதுப்பித்தார்.தமிழ்த் தொண்டு ஆற்றுவதற்காகவே உணவும் தூக்கமும் தொலைத்தார்; இறுதியில் தம் பணியில் வெற்றியும் பெற்றார். இவர் தமிழ்த்தாத்தா என்று போற்றப்படுகிறார்.



**A** பற்றும் பாசமும் – ஊண் உறக்கம்

**B** அருமை பெருமை – இன்ப துன்பம்

**C** சீரும் சிறப்பும் – உள்ளும் புறமும்

**D** பேரும் புகழும் – ஆதி அந்தம்

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள **திருக்குறளின்** சரியான அடியைத் தெரிவு செய்க.

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
..........................................................

**A** சொல்லிய வண்ணம் செயல்

**B** ஒழுக்க முடையார்வாய்ச் சொல்

**C** சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

**D** சொல்லுதல் வல்லார்ப் பெறின்

www.papercollection.wordpress.com


4. கீழே கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கேற்ற **திருக்குறளைத்** தெரிவு செய்க.



தமிழ் நாட்டைச் சேர்ந்த இவர் உலகச் சதுரங்கப் போட்டியில் ஐந்தாவது முறையாக வெற்றி பெற்றிருப்பது ஒரு தமிழனின் சாதனையாகும். இந்தச் சாதனையைப் போற்றும் வகையில் தமிழக அரசு பத்து இலட்சம் ரூபாயைப் பரிசுத் தொகையாகக் கொடுத்தது.இவரின் வெற்றிக்குத் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உழைப்பு, ஒழுக்கம் போன்றவைகளே காரணம் என்று இவரின் பெற்றோர் அகமகிழ்ந்து கூறுகின்றனர்.

**ஆனந்த் விசுவநாதன்**

**A** ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை

**B** ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

**C** ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

**D** இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்

5. கீழ்க்காணும் **செய்யுளை** வாசித்து, அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.

எப்பிறப் பாயினும் **ஏமாப் பொருவற்கு**
மக்கட் பிறப்பில் பிறிதில்லை –அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்

கோடிடப்பட்டுள்ள **சொற்றொடருக்கு** மிகப் பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

**A** இன்பம் தருவது

**B** பெருமை தருவது

**C** புகழ் தருவது

**D** நன்மை தருவது

www.papercollection.wordpress.com


6. கீழே கொடுக்கப்பட்டுள்ள **உவமைத்தொடருக்கு** ஏற்ற விளக்கத்தைத் தெரிவு செய்க.

**உள்ளங்கை நெல்லிக்கனி போல**

**A** சேர்ந்தே இருத்தல்

**B** மிகவும் பாதுகாப்பாக இருத்தல்

**C** எல்லாராலும் அறியப்படுதல்

**D** மிகவும் தெளிவாகத் தெரிதல்

7. கீழே கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கேற்ற **பழமொழியைத்** தெரிவு செய்க.



நம் நாடு விடுதலைபெற பிற இனத்தவர்களோடு சேர்ந்து போராடிய துன் வீ.தி. சம்பந்தன் அவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்.அதே வேளையில் வறுமையில் வாடிய தமிழர்களின் சொத்துடைமையை உயர்த்துவதற்கும் எண்ணம் கொண்டார். தம் கனவினை நனவாக்க தோட்டம் தோட்டமாகச் சென்று மாதா மாதம் பத்து ரிங்கிட் வசூல் செய்து தமது நோக்கத்தில் வெற்றியும் கண்டார்.

**A** பதறாத காரியம் சிதறாது

**B** ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**C** மனம் உண்டானால் மார்க்கம் உண்டு

**D** ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு

www.papercollection.wordpress.com


8. கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளுக்குத் **தவறான** பொருள் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

I **அகத்தின் அழகு முகத்தில் தெரியும்**
பொருள் : ஒருவருடைய மன நிலையை அவர் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் முகம் காட்டிவிடும்

II **தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்**
பொருள் : ஒருவரின் பழக்க வழக்கங்கள் என்றும் மாறாமல் இருந்து வரும்.

III **இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை**
பொருள் : தன்னிடமுள்ள ஒன்றின் சிறப்பினை உணராமல் பிறிதொன்றின் வெளித்தோற்றத்தில் மயங்கி அதனை உயர்வாகக் கருதுவதால் பயன் கிடையாது.

IV **எறும்பு ஊரக் கல்லும் தேயும்**
பொருள் :ஒரு செயலைக் கவனமாகச் செய்தால் நாளடைவில் மிகவும் எளிதாகிவிடும்.

**A** I , II

**B** I , III

**C** II , IV

**D** III , IV

 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan 

www.papercollection.wordpress.com


9. கீழே கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கேற்ற **திருக்குறளைத்** தெரிவு செய்க.



**கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் எழுதிய புத்தகங்களைப் படித்ததாலும் அவர் ஆற்றிய உரைகளைக் கேட்டதாலும் அவை குமரனின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்ததோடு துன்பம் ஏற்படும் போது அவன் அதிலிருந்து விடுபடுவதற்கும் உதவின.**

**A** புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்

**B** இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்

**C** விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்

**D** சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கேற்ற **பழமொழியைத்** தெரிவு செய்க.

இவற்றை ‘இப்படித்தான் எழுத வேண்டும்’ என்ற நூலை வாசித்தபின் ஆசிரியர் திருச்செல்வத்தின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் அறிவியல் சிந்தனையும் புலப்படுகிறது. இந்நூலை எழுத அவர் பல அரும்பெரும் தமிழ் நூல்களை வாசித்திருப்பது தெரிய வருகிறது. மலேசியத் தமிழறிஞர் திருச்செல்வத்தின் தமிழ்ப்பணித் தொடர வேண்டுகிறேன்.

முனைவர். க.திலகவதி

**A** கண்டதைக் கற்க பண்டிதனாவான்

**B** அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

**C** இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து

**D** கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan 

www.papercollection.wordpress.com


11. கீழே கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கு ஏற்ற **இணைமொழியைத்** தெரிவு செய்க.

சட்டவிரோத மோட்டார் பந்தயத்தில் ஈடுபடுவோர் தங்கள் உயிரையும் உடைமைகளையும் இழக்கின்றனர். இதனைத் தவிர்ப்பதற்கு அவர்கள் விதிமுறைகளைப் பின்பற்றி மோட்டாரைச் செலுத்தினால் தாமும் தம்மைச் சார்ந்தவரும் நன்மை அடைவது திண்ணம்.

**A** கள்ளங் கபடு

**B** சட்ட திட்டம்

**C** பற்றும் பாசமும்

**D** இன்ப துன்பம்

12. கோடிட்ட இடத்திற்கு ஏற்ற **இரட்டைக் கிளவியைத்** தெரிவு செய்க.

**சீலன் பள்ளிக்குச் செல்வதற்குத் தாமதமாகியதால் காலையில் பசியாறாமல்................ வெனப் புறப்பட்டுச் சென்றான்.**

**A** மட மட

**B** பர பர

**C** விறு விறு

**D** துரு துரு

www.papercollection.wordpress.com


**பிரிவு ஆ : இலக்கணம்**
**[ கேள்விகள் 13 - 27 ]**

13. கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் **குன்றாவினை** தொடரைத் தெரிவு செய்க.

A கதிரவன் உதித்தான்
B சேவல் கூவியது
C அருளன் விழித்தான்
D திருக்குறளைப் படித்தான்

14. கீழே கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் **கெடுதல் விகாரப்** புணர்ச்சி விதியை எற்று வந்துள்ள சொற்றொடரைத் தெரிவு செய்க.

A மானினம்
B காரவடை
C தைத்திங்கள்
D பொற்றாமரை

15. கொடுக்கப்பட்ட இலக்கணவிதிக்குப் **பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

| |
|---|
| ஒரு பொருளின் பெயர் அதனைக் குறிக்காமல், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகிவருவது |

A ஆகுபெயர்
B காரணப்பெயர்
C இடுகுறிப்பெயர்
D தொழிற்பெயர்

 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan 

www.papercollection.wordpress.com


16. கீழ்க்காண்பனவற்றுள் **வினையடையை** ஏற்று வந்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

**A** ஆறுமுக நாவலர் தமிழோடு சைவ நெறியையும் பரப்பினார்.

**B** கரிகாலன் கட்டிய கல்லணை இன்றளவும் உறுதியாக உள்ளது.

**C** பாண்டிய மன்னன் கூர்மையான வாளால் எதிரிகளை வீழ்த்தினான்.

**D** மாதவியின் அழகிய தோற்றத்தைக் கண்டு மயங்கினான் கோவலன்.

17. கோடிட்ட சொற்கள் ஏற்கும் **வேற்றுமை உருபைத்** தெரிவு செய்க.

> **திருக்குறளும் திருவாசகமும் <u>தமிழர்</u> வாழ்வியல் <u>வளர்ச்சி</u> மிகச் சிறந்த வழிகாட்டி நூல்களாகத் திகழ்கின்றன.**

**A** கு , ஐ

**B** அது , ஒடு

**C** இன் , கு

**D** உடைய , ஆல்

18. கீழ்க்காணும் படத்திற்கேற்ற மிகச் சரியான **பெயர்ச்சொல்லைத்** தெரிவு செய்க.



**A** இடப்பெயர்

**B** சினைப்பெயர்

**C** தொழிற்பெயர்

**D** பொருள் பெயர்

 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan 

www.papercollection.wordpress.com


19. கீழ்க்காணும் சூழலில் இடம்பெற்றுள்ள **வினைமுற்று** காட்டும் இலக்கணக் கூறுகளைத் தெரிவு செய்க .



ஸ்குவாஷ் விளையாட்டு வீராங்கனை நிக்கோல் டேவிடிற்குப் பிரதமர் பரிசு **வழங்கினார்.**

I இடம்
II பால்
III காலம்
IV வேற்றுமை

**A** I , II , III
**B** I , II , IV
**C** I , III , IV
**D** II , III , IV

20. கீழ்க்காண்பனவற்றுள் **வலிமிகும்** சொற்றொடரைத் தெரிவு செய்க

**A** கதை படித்தான்
**B** அன்னையினது பை
**C** தோழியை கண்டேன்
**D** கூரையிலிருந்து குதித்தான்

21. கீழ்க்காண்பனவற்றுள் **தவறான இணையைத்** தெரிவு செய்க

| | | |
|---|---|---|
| **A** | சுட்டெழுத்துகள் | அ, இ, உ |
| **B** | உயிர்க்குறில்கள் | அ, இ, உ, எ, ஐ |
| **C** | வினா எழுத்துகள் | எ, ஏ. யா, ஆ, ஓ |
| **D** | வல்லின உயிர்மெய்கள் | கி, சு, டி, து, பூ, றே |

www.papercollection.wordpress.com


22. கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் **அகவினா** ஏற்று வந்துள்ள பாடல் வரியைத் தெரிவு செய்க.

**A** ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா?

**B** காற்று வந்ததும் கொடி அசைந்ததா?

**C** உள்ளார் புசிப்பார் இல்லார் பசிப்பார் உதவிக்கு யாரோ?

**D** ஏன்? என்ற கேள்வி கேட்காமல் வாழ்க்கை இல்லை

23. மிகச் **சரியான** விடையைத் தெரிவு செய்க.

**பாவேந்தர் பாரதிதாசன் குடும்ப விளக்கை இயற்றினார்**

| | **எழுவாய்** | **பயனிலை** | **செயப்படுபொருள்** |
|---|---|---|---|
| **A** | குடும்ப விளக்கு | பாவேந்தர் பாரதிதாசன் | இயற்றினார் |
| **B** | பாவேந்தர் பாரதிதாசன் | இயற்றினார் | குடும்ப விளக்கு |
| **C** | இயற்றினார் | குடும்ப விளக்கு | பாவேந்தர் பாரதிதாசன் |
| **D** | இயற்றினார் | பாவேந்தர் பாரதிதாசன் | குடும்ப விளக்கு |

www.papercollection.wordpress.com


24. கீழே கொடுக்கப்பட்டுள்ள **சொற்புணர்ச்சியின் இலக்கண விதியைத்** தெரிவு செய்க.

| |
|---|
| **வரைந்த படம்** |

**A** விளித் தொடரில் வலிமிகாது

**B** எழுவாய்த் தொடரில் வலிமிகாது

**C** பெயரெச்சத்தின் பின் வலிமிகாது

**D** இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலிமிகாது

25. கீழ்க்காணும் **நேர்க்கூற்று வாக்கியத்திற்கு ஏற்ற அயற்கூற்று வாக்கியத்தைத்** தெரிவு செய்க.

| |
|---|
| **“மாணவர்களே, நீங்கள் திருக்குறளைக் கற்பதோடு அதனை வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும்” என்றார் ஆசிரியர்.** |

**A** ஆசிரியர் மாணவர்களிடம் திருக்குறளைக் கற்பதோடு அதனை வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறினார்.

**B** ஆசிரியர், மாணவர்களே நீர் திருக்குறளைக் கற்பதோடு அதனை வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

**C** ஆசிரியர் மாணவர்களிடம் தாங்கள் திருக்குறளைக் கற்பதோடு அதனை வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறினார்.

**D** ஆசிரியர், அவர்கள் திருக்குறளைக் கற்பதோடு அதனை வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று மாணவர்களிடம் கூறினார்.

www.papercollection.wordpress.com



26. கீழ்க்காண்பனவற்றுள் **இனவெழுத்தைக் கொண்டிராத** படத்தைத் தெரிவு செய்க.



**A**



**B**



**C**



**D**

27. பின்வரும் கவிதையினைப் படித்து, தொடர்ந்து வரும் வினாவுக்கு விடை காண்க.

த**மி**ழா நீ வாழப்
பணி ஆற்று!
த**மி**ழல்லவா உன்னை
இயக்கும் உயிர்க்காற்று!

த**மி**ழ்வாழ உழைப்போர்க்கு
துணையாக இருப்பாய்!
த**மி**ழையார் எதிர்த்தாலும்
எழுவாய் நீ நெருப்பாய்!

- உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

இக்கவிதையில் கருமையாக்கப்பட்டுள்ள எழுத்துகள் ___________ ஆகும்

**A** எதுகை

**B** மோனை

**C** சந்தம்

**D** சீர் மோனை

www.papercollection.wordpress.com


பின்வரும் கவிதையை வாசித்து, தொடர்ந்து வரும் வினாவுக்கு விடை காண்க.

இனவுணர்வை மொழியுணர்வை இளமனத்தில் பதித்தவர்கள்
**இருளோட்டும் கதிரிவர்கள்** - புதிர்
கணக்குரைத்து விஞ்ஞானக் கல்வியினைக் கொடுத்தவர்கள்
கண்களாக ஒளிர்பவர்கள்...!

தாய்மொழி யிங்கே தழைப்பதற்குத் தொண்டு
சளைக்காமல் புரிபவர்கள் – ஒரு
காய்போல் அனுப்பிய மாணவனை அறிவுக்
கனியாக்கித் தருபவர்கள்...!

- ம.அ.சந்திரன்

28. இக்கவிதையின் **கருப்பொருள்** யாது?

**A** ஆசிரியரின் மகிமை

**B** ஆசிரியரின் கடமை

**C** ஆசிரியரின் ஆற்றல்

**D** ஆசிரியரின் அர்ப்பணிப்பு

29. **இருளோட்டும் கதிரிவர்கள்** எனும் சொற்றொடரின் பொருள் யாது?

**A** இருளோட்டும் சூரியன்கள்

**B** காரிருளை விரட்டுபவர்கள்

**C** அறிவைப் பெருக்குபவர்கள்

**D** அறியாமையைப் போக்குபவர்கள்

 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan 

www.papercollection.wordpress.com


**கேள்விகள் 30 –-35**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதையை வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை காண்க.*

“கெட்டிக்காரன்! நன்றாகப் படிப்பான். சிரமப்பட்டாவது அவனைத் தொடர்ந்து படிக்க வையுங்கள்…...”கண்ணனின் ஆசிரியர், அவன் பெற்றோரிடம் முன்பு கூறியது அவனுக்கு இன்றைக்குக் கூறியது போலிருந்தது. கண்கள் கலங்கின. அப்பாவை நினைத்துக் கொண்டான். நெஞ்சில் முள் இறங்கியது போலிருந்தது.

படிப்புதான் ஒரு சமுதாயத்தை உயர்த்தும் என்ற 2020-ன் அரசாங்க கொள்கையில் பிடிப்பாய் இருந்து கனவு கண்டு வந்தவன் அவன். படித்து நல்ல நிலைக்கு வர வேண்டுமென அவனும் அவன் அம்மாவும் கண்டுவந்த கனவுகள் அப்பாவால் சிதறிப் போயின. அந்தத் துயரம் கண்ணனின் மனத்தில் பெருஞ்சுமையை ஏற்படுத்தியிருந்தது!

சாப்பாட்டை எடுத்து வைத்துவிட்டு மகனைப் பார்க்கிறாள் அம்மா.

“ஏம்பா! உடம்புக்கு என்ன?”

“ஒன்னுமில்லையம்மா!”

“அப்புறமென்னையா! சாப்பிடு….”

“எனக்கு வேண்டாம்மா…..!”

“ஏன்?”

“எனக்குப் பசியில்லை…..”

அப்போதுதான் அவனை நன்றாகக் கூர்ந்து பார்க்கிறாள். பட்டுப்போன மரத்தைப்போல அந்தக் குருத்துப் பிஞ்சு வாடி வதங்கிப் போயிருந்தது. “ஒரு மாதத்திற்குள் பிள்ளை என்னமா வாடிப் போய்விட்டான்”……..?அவள் நெஞ்சில் சில்லென்று ஒன்று இறங்கியபோது கண்களில் நீர் கோர்த்தது. எல்லாமே சொல்லி வைத்ததுபோல நடந்து முடிந்தது.

கண்ணனும் அவன் அம்மாவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டனர். அப்பா ஒரே பிடிவாதமாக இருந்தார். “எனக்கு இன்னும் கொஞ்ச காலம்தான் இருக்கு. நான் வேலை செய்யும் போதே உனக்கு ஒரு வேலையைப் பார்த்துக் கொடுத்துடுறேன். இப்ப வேலைக்கு ஆள் எடுக்கிறாங்க. வேலை செய்றவங்களோட பிள்ளைகளுக்கு முதல் சலுகை கொடுப்பாங்க. எனக்குப் பெரியவரு, பையன்கள் இருந்தா கொண்டு வாங்கனு சொன்னாரு. எவன் கூப்பிட்டு இந்தக் காலத்தில வேலை கொடுப்பான்?”

www.papercollection.wordpress.com


அப்பா ஒரே பிடிவாதமாக இருந்தார். அம்மா எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்.

"மண் வெட்டறது, ரோடு கூட்டறது, குப்பைக்கூளங்களை அள்ளறது எல்லாம் உங்களோடு போகக் கூடாதா? நல்லா படிக்கிற பிள்ளையை வீணாக்கப் பார்க்கிறீங்களே, இது சரியா?" அம்மா மீண்டும் அப்பாவிடம் வாதாடினாள்.

"சரியா தப்பா எனக்குத் தெரியும். உன் வேலையை நீ பாரு!"

எனக்காக, அம்மா அப்பாவிடம் உதையுங்கூட வாங்கினாள். ஆனால், என் தலையில் எழுதி இருக்கிறதே!அன்றிரவு அம்மாவுங்கூட சாப்பிடவில்லை.

மறுநாளே அப்பா என்னை அழைத்துக் கொண்டு போய் பண்டாராயாவில் வேலைக்குச் சேர்த்துவிட்டார். அதில் அவருக்கு மிகவும் மகிழ்ச்சி.

ரோடு கூட்டிச் சுத்தம் செய்ய வேண்டும். குப்பைக்கூளங்களை அள்ளிப் போட வேண்டும். அப்பா செய்கின்ற அதே வேலைதான்! "ஓ" என்று அழனும் போல இருக்கு எனக்கு! தலை பாரமா கனத்துப் போனது. நான் படிக்கனும், நான் படிக்கனும்! எவ்வளவோ சொல்லி அழுதேன். அப்பா கேட்கவில்லை. அப்பா தன் முடிவில் இறுதிவரை பிடிவாதமாக இருந்து நினத்ததைச் சாதித்துவிட்டார்.

**அந்தக் குருத்து முளையிலே வெட்டி வீழ்த்தப்பட்டது**. சில குடும்பங்களில் அப்பாமார்கள் எடுக்கிற முடிவுகளால் எத்தனைக் குருத்துகள் இப்படி......?அப்பாவை நினைத்துக்கொண்டபோது நெஞ்சில் முள் இறங்கியதுபோல் ஒரு வலி!

அம்மாவின் கண்களில் கண்ணீர் கோடிட்டிருந்தது . அவள் கனவுகளும் நேற்றோடு சின்னப்பின்னமாகிப் போயின.

பண்டாராயா சட்டையைக் கழற்றி நாற்காலியின் மேல் போட்டுவிட்டு, ஆசுவாசப்பட்டுப்போய் உட்கார்ந்த மகனைப் பார்த்துத் துடித்துப் போகிறாள் அம்மா!

" கண்ணா!..... என் மகனே!......." என்று பிரபஞ்சமே அலற, தாய்மை தவித்தது.

கண்ணனின் மனக்கண்ணில் தூரத்தில், வெகு தூரத்தில் 2020 என்று எழுதப்பட்ட பதாகை மங்கலாகத் தெரிந்தது. அந்தப் "பிஞ்சு" உள்ளத்தில் ஓயாத புயல் வீசிக் கொண்டிருந்தது. அதிலே அவன் அவனாக இல்லை.

சாமி.மூர்த்தி
[மயில் - எடுத்தாளப்பட்டது]

 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan 

www.papercollection.wordpress.com


30. இச்சிறுகதையின் **கருப்பொருள்** யாது?

**A** தாயின் அன்பு

**B** தந்தையின் தன்னலம்

**C** மகனின் தலையெழுத்து

**D** தந்தையின் தவறான முடிவு

31. இச்சிறுகதையில் இடம்பெற்றுள்ள தந்தையைப் பற்றிய **சரியான கூற்று** யாது?

**A** மகனின் கருத்திற்கு மதிப்பளிப்பவர்

**B** தூர நோக்குச் சிந்தனை இல்லாதவர்

**C** சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் திறனுள்ளவர்

**D** மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்கப் பாடுபடுபவர்

32. "**அந்தக் குருத்து முளையிலே வெட்டி வீழ்த்தப்பட்டது**" எனும் சொற்றொடரின் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது?

**A** இளம் பயிர் வெட்டி வீழ்த்தப்பட்டது

**B** மகனின் எதிர்காலம் அழிக்கப்பட்டது

**C** மகனின் விருப்பம் நிராகரிக்கப்பட்டது

**D** தொடக்கத்திலேயே வாய்ப்பு மறுக்கப்பட்டது

33. இறுதிப் பத்தி வழி வெளிப்படும் மகனின் மன உணர்வு யாது?

**A** விரக்தி

**B** ஏமாற்றம்

**C** மனக் குமுறல்

**D** மனக் குழப்பம்

www.papercollection.wordpress.com


34. **“ கண்ணா…..! என் மகனே…….” என்று பிரபஞ்சமே அலற, தாய்மை தவித்தது**. இவ்வாறு தாய் தவித்ததற்கான காரணம் என்ன?

**A** மகனின் அவல நிலையை நினைத்து

**B** தன் கணவன் எடுத்த முடிவை நினைத்து

**C** தன் கனவு சிதைந்து போனதை நினைத்து

**D** எதுவும் செய்ய முடியாத தன் இயலாமையை நினைத்து

35. இச்சிறுகதை உணர்த்தும் படிப்பினை யாது?

**A** பெற்றோர் ஒன்றுபட்டு முடிவெடுக்க வேண்டும்

**B** பிள்ளைகள் பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்.

**C** பெற்றோர் பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்

**D** பிள்ளைகள் பெற்றோர் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டும்

www.papercollection.wordpress.com


**பிரிவு ஈ : கருத்துணர்தல் ( பல்வகை )**
**[ கேள்விகள் 36 – 40 ]**

*கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப்பகுதியை வாசித்து, அதனைத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை காண்க.*

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவன் வாக்கு. உயிரையும் விட்டுவிடலாம்; ஒழுக்கத்தை மட்டும் கைவிடவே கூடாது என்பது இதன் பொருள். ஒழுக்கம், மனத்தின் தூய்மையையும் வலிமையையும் பொறுத்தே அமைகிறது. உழைத்து வாழ விரும்புவதும் பிறருக்கு உதவ நினைப்பதுவும் உள்ளத்தை உயர்த்துகின்றதன. இப்படியே அன்பு, அருள், வாய்மை, தியாகம், கொடை போன்ற நல்லொழுக்கங்கள் நம்மை மேன்மேலும் உயர்த்துகின்றன. பொறாமை, பொய்மை, களவு, சினம், கொடுமை, தன்னலம் போன்றவை நம்மைத் தாழ்த்துகின்றன.

நாம் அறிவார்ந்த இனத்தில் பிறந்தவர்கள். இந்த நினைப்பு நம்மிடம் மிக அழுத்தமாகப் பதிந்திருக்க வேண்டும். நம் இனத்தின் மதிப்பைக் காப்பாற்றுவது நமது பொறுப்பு என்ற கடமையுணர்வு வலுப்பெற வேண்டும். குடிமை உணர்வுதான் ஒவ்வொரு தனி மனிதனையும் அவன் பிறந்த இனத்தையும் உயர்த்துகின்றது. நாட்டுப்பற்றுக்கும் தியாகங்களுக்கும் இந்த உணர்வே அடிப்படையாகும். இதனால்தான் நம் முன்னோர்களின் வாழ்வு உயர்ந்து காணப்பட்டது. பழங்காலத்தில் ஒவ்வொரு குடும்பமும் இந்தக் குடிமை உணர்வை உறுதியோடு காப்பாற்றி வந்தது.

நம் முன்னோர்கள் உடலைப்பற்றிய ஆராய்ச்சிகளைக் காட்டிலும் உயிரைப் பற்றிய ஆராய்ச்சிக்கே முக்கியத்துவம் அளித்தார்கள். உடலை வலிமையாக்கி உள்ளத்தைச் **செம்மையாக்கி** இறைச்சக்தியை அடைவதுதான் நம் வாழ்க்கையின் நோக்கமாகும். மெய்ஞ்ஞானத்தில் நாம் நாட்டம் செலுத்தினால் நம்முடைய அறியாமை நீங்கும். அறியாமை விலக விலக நம்முடைய அறிவொளி சுடர்விடும். நம்மிடமுள்ள அறிவொளி பிறரை நம் பக்கம் ஈர்ப்பதோடு அவர்களின் அறியாமையையும் போக்கும்.

மரணத்தைப் போக்கி வெற்றிபெறக் கருதிய மனிதனின் முயற்சியில்தான், உடல் அழியக்கூடியது, உயிர் அழிவற்றது என்ற உண்மை வெளிப்பட்டது. ஆதி மனிதனுக்கு மரணம் மிகவும் பயங்கரமாகத் தோன்றியது. எனவே, அவன் சாவைத் தள்ளிப்போட பெரிதும் முயன்றான். இந்த முயற்சியால்தான் மருத்துவ முறைகளும் யோகப்பயிற்சிகளும் தோன்றின. முடிவில் உயிர் அழியாது என்பதை உணர்ந்தான். அஃது அவனுக்குப் புதிய சக்தியையும் மனநிம்மதியையும் தந்தது. ஆன்மாவைப் பற்றிய ஆராய்ச்சி மனிதனுக்குப் பல புதிய உண்மைகளைப் புலப்படுத்தியது. மனவலிமை உடல் வலிமையைவிட பேராற்றல் வாய்ந்தது என்பதை உணர்ந்ததும் மனிதன் அதில் தன் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினான்.

மனோசக்தி – புலியூர் கேசிகன்
[எடுத்தாளப்பட்டது]

www.papercollection.wordpress.com


36. ஒழுக்கத்தைப் பற்றிய கட்டுரையாளர் கருத்து என்ன?

I ஒழுக்கத்தைவிட உயிர் மேலானது
II மனத்தூய்மையும் ஆற்றலும் ஒழுக்கத்தை முடிவு செய்கின்றன
III ஒழுக்கம் நல்லொழுக்கம், தீயொழுக்கம் என இரு வகைப்படும்
IV ஒழுக்கத்தைப் பொறுத்தே நம் வாழ்வின் உயர்வும் தாழ்வும் அமைகின்றது

**A** I , II

**B** I , IV

**C** II , III

**D** II , IV

37. குடிமை உணர்வால் ஏற்பட்ட பயன் யாது?

**A** தனி மனிதனை மட்டும் மேம்படுத்தியது

**B** ஒவ்வொரு குடும்பத்தையும் காப்பாற்றியது

**C** நம் முன்னோர்களின் வாழ்வை உயர்த்தியது

**D** நம் பரம்பரையின் செல்வாக்கை அதிகரித்தது

38. கீழ்க்காண்பனவற்றுள் மெய்ஞ்ஞானத்தின் இயல்புகள் யாவை?

I அறியாமையை நீக்கக் கூடியது
II மனத்தை அழிக்கக்கூடியது
III செலவில்லாமல் பெறக் கூடியது
IV அறிவைக் கூர்மையாக்கக்கூடியது

**A** I , II

**B** I , IV

**C** II , III

**D** III , IV

© 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan

www.papercollection.wordpress.com


39. இறுதிப் பத்தி உணர்த்தும் கருத்து யாது?

**A** மரணம் மனிதனுக்குப் புதிய சக்தியைக் கொடுத்தது

**B** மரணம் மனிதனை உலகத்தைவிட்டுப் பிரித்துச் சென்றது

**C** மரணம் மனிதனை மனோசக்தி ஆராய்ச்சிக்குக் கொண்டு சென்றது

40. **'செம்மையாக்கி'** என்னும் சொல்லின் பொருள் யாது?

**A** சிவப்பாக்கி

**B** சீராக்கி

**C** அழகுபடுத்தி

**D** நேர்படுத்தி

**KERTAS SOALAN TAMAT**

 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan 

www.papercollection.wordpress.com



# JABATAN PELAJARAN NEGERI
# NEGERI SEMBILAN DARUL KHUSUS

**PRAPENILAIAN MENENGAH RENDAH 2012** **33/2**

**BAHASA TAMIL**
**தமிழ் மொழி**
**KERTAS 2**
**தாள் 2**
**Ogos 2012**
**2 JAM**
**2 மணி**

---

JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU

(அறிவிக்கும் வரை வினாத்தாளைத் திறக்காதே)

1. Kertas soalan ini mengandungi empat bahagian: **Bahagian A, Bahagian B, Bahagian C dan Bahagian D.**
2. Untuk soalan Bahagian A, pilih Dua soalan daripada empat pilihan yang diberi.
3. Untuk soalan Bahagian D, pilih Satu tajuk daripada lima pilihan tajuk yang diberi.
4. Jawapan anda hendaklah ditulis dalam kertas tulis yang disediakan.



**33/2 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan**

www.papercollection.wordpress.com


**பொதுக்கட்டளை :**

இக்கேள்வித்தாள், **பிரிவு அ, பிரிவு ஆ, பிரிவு இ, பிரிவு ஈ** என நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக மொத்தம் **நான்கு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வாக்கியம் அமைத்தல்**

**[6 புள்ளிகள்]**

**[பரிந்துரைக்கப்படும் நேரம் : 10 நிமிடம்]**

கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் ஏதேனும் **இரண்டு** இணைகளைத் தெரிவு செய்து **பொருள் வேறுபடுமாறு** தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

1 (அ) முலை
(ஆ) முளை

2 (அ) பரந்து
(ஆ) பறந்து

3 (அ) ஆனை
(ஆ) ஆணை

4 (அ) பால்
(ஆ) பாழ்

**கவனத்தில் கொள்க:**

– இணையிலுள்ள இரண்டு சொற்களையும் ஒரே வாக்கியத்தில் அமைத்தல் கூடாது.

– இணையிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் **ஒரு வாக்கியம் மட்டுமே** அமைத்தல் வேண்டும்.

– வாக்கியம் அமைக்கும் பொழுது சொற்களுடன் உருபுகளோ அடைகளோ விகுதிகளோ சேர்த்துக் கொள்ளலாம்.

www.papercollection.wordpress.com


## பிரிவு ஆ : சுருக்கி எழுதுதல்

**[10 புள்ளிகள்]**

**[பரிந்துரைக்கப்படும் நேரம் : 20 நிமிடம்]**

2 கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியைக் கருத்தூன்றி வாசித்து, அதனை **60 சொற்களில் சுருக்கி** எழுதுக.

சங்க இலக்கியம் தமிழர்களின் நாகரிகம், கலை, பண்பாடு இவற்றைப் பிரதிபலிக்கிறது. இது தமிழர் வரலாற்றைப் பதிவு செய்யும் காலக்கண்ணாடியாய் வரலாற்றுப் பெட்டகமாய் விளங்குகின்றது. பழந்தமிழர்களின் வாழ்வியலையும் வளமையையும் அறிவதற்கு இன்றும் சங்க இலக்கியங்களே கருவூலங்களாக இருக்கின்றன.

சங்க காலத்தில் வாழ்ந்த நானூற்று எழுபத்து மூன்று புலவர்களுள் ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்பால் புலவர்கள், இருநூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி இருக்கின்றனர். ஆண்பால் புலவர்களுக்கு இணையாகப் பெண்பால் புலவர்களும் கவிதை படைக்கும் திறமை பெற்றிருந்தனர். சங்ககாலத்தில் பெண்கள் சமுதாயத்தில் கண்களாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டனர். இவர்களின் திருமணங்கள் பெரும்பாலும் பெற்றோரின் ஒப்புதலுடனே நடைபெற்றன. அத்திருமணங்களே பெரிதும் மதிக்கப்பட்டன. சங்ககாலப் பெண்கள் இல்லறத்தைக் காக்கும் பொறுமையுடையவர்களாய்த் திகழ்ந்தனர்.

சங்க காலத் தமிழ்ப்பெண்கள் ஒழுக்கத்தை முக்கியமாகக் கருதினர். எனவேதான், குறை ஒன்றும் இல்லாதவளாகவும் பெருமை உடையவளாகவும் சங்க இலக்கியத்தில் தலைவி படைக்கப்பட்டுள்ளாள். சிறந்த குலத்தில் பிறந்த பெண்கள், எவ்வளவுதான் வறுமையில் வாடினாலும் தம் வறுமையைப் பிறருக்குத் தெரியா வண்ணம் குலப் பெருமையைக் காப்பாற்றினர். அவர்களின் குடும்பம், வறுமை அடைந்தபோதும் தந்தை அன்புடன் அளித்த உணவுப் பொருளை ஏற்காமல், தம்மிடம் இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சியடைவர். இதுவே சிறந்த பெண்களின் பண்பாகும் என்பதை நற்றிணைப் பாடல் மிக அழகாக விளக்குகிறது.

சங்க இலக்கியப் பெண்கள் பெருமைக்கு மேலும் ஒரு சான்று பகர்வது விருந்தோம்பல் பண்பாகும். நல்ல விருந்தினரைக் கண்டவுடன் தம் இல்லத்தின் எதிர்சென்று வரவேற்றுப் போற்றும் நல்லோர்கள் வாழ்ந்தனர் என்பதை குறுந்தொகையில் அறிய முடிகிறது.

சங்ககாலத் தாய்மார்கள் வீரமுடையவர்களாகத் திகழ்ந்தனர். அதனால், தம் குழந்தையும் பெரிய வீரனாக இருக்க வேண்டுமென விரும்பினர். தாம் பிறந்த குடிக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பதிலும், பலரும் தன் மகனைச் சான்றோன் எனக் கூறவும், அதைக் கேட்டுத் தாம் மகிழ வேண்டும் என்பதிலும், அக்காலத் தாய்மார்கள் மிகுந்த விருப்பமுடன் இருந்தனர்.

www.papercollection.wordpress.com


ஒரு சமுதாயத்தின் பெரும் பகுதியினர் ஏற்றுக்கொண்டுள்ள குறிக்கோள்கள், நம்பிக்கைகள், அறிவுரைகள் ஆகியன விழுமியங்கள் எனப்படும். இப்படிப்பட்ட விழுமியங்களைச் சங்ககாலப் பெண்கள் பெற்றிருந்தனர். அன்றைய மகளிர் கற்பொழுக்கத்தையும் மன உறுதியையும் நிலையாகப் பெற்றிருந்ததைச் சங்கப் பாடல்களில் காணமுடிகிறது.

*நன்றி – மயில்*
(எடுத்தாளப்பட்டது)

www.papercollection.wordpress.com


**பிரிவு இ : வழிகாட்டிக் கட்டுரை**

**[ 14 புள்ளிகள் ]**

**[ பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம் ]**

கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஓர் எழுத்துப்படிவத்தை **80 - 100 சொற்களுக்குள்** எழுதுக.

எதிர்வரும் பி.எம்.ஆர் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்கான வழிமுறைகளை அறிய விரும்புகின்றீர். அது குறித்து உம் நண்பனுடன் உரையாடுகின்றீர். கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி **அவ்வுரையாடலை** எழுதுக.

கொடுக்கப்பட்டுள்ள அனைத்துக் குறிப்புகளையும் **கட்டாயம்** பயன்படுத்த வேண்டும்.

- கால அட்டவணையைப் பின்பற்றுதல்
- மாதிரி பயிற்சிகளைச் செய்தல்
- ஆசிரியரை அணுகி தெளிவு பெறுதல்
- தேர்வு வழிகாட்டிக் கருத்தரங்கில் கலந்துகொள்ளல்

உரையாடல் கீழ்க்காணும் கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- சூழல் இருத்தல்
- முகமன் இருத்தல்
- இருவர் பேசுவதாக இருத்தல்
- ஒருவர் குறைந்தது இருமுறை பேசுவதாக இருத்தல்
- உரையாடலுக்கு உரிய மொழிப்பயன்பாடு இருத்தல்
- விடைபெறுதல்

 © 2012 Hak Cipta Jabatan Pelajaran Negeri Sembilan 

www.papercollection.wordpress.com


## பிரிவு ஈ : திறந்தமுடிவுக் கட்டுரை

**[ 30 புள்ளிகள்]**

**[பரிந்துரைக்கப்படும் நேரம்: 60 நிமிடம்]**

கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றனைப் பற்றி **180 – 200 சொற்களுக்குள்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 ஒழுக்கம்.

இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை எழுதுக.

2 இன்றைய மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதற்குத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளே காரணம்.

இத்தலைப்பை **வாதித்து** எழுதுக.

3 வீட்டில் பணிப்பெண்களை வேலைக்கு அமர்த்துவதால் பல நன்மைகளும் தீமைகளும் விளைகின்றன.

இத்தலைப்பை **விவாதித்து** எழுதுக.

4 மாநில அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலக்கிய விழாவுக்குச் சிறப்பு வருகையாளராக அழைக்கப்படுகின்றீர்.அந்நிகழ்வில் தமிழர்களின் கலையையும் பண்பாட்டையும் பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்துச் சிறப்புரை ஆற்றவிருக்கின்றீர்.

**அவ்வுரையை** எழுதுக.

5 " உனக்கு எந்த நேரம் பார்த்தாலும் கணினிதானா? என்னதான் அதுல இருக்கோ? புத்தகம் எடுத்து படிப்பதே இல்ல!" என்று அம்மா திட்டியதையும் பொருட்படுத்தாமல் முகநூலில்* மூழ்கி இருந்தாள் அமுதா. அழகான ஒரு வாலிபனின் முகநூல் நட்பு கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தாள். தன்னைப் பற்றிய முழு விவரங்களையும் அவனுக்கு அனுப்பிக்கொண்டிருந்தாள். தனக்கு வரப்போகும் பேராபத்தைச் சிறிதும் அறியாத அவள். . . . . . . . . .

இவ்வாறு தொடங்கும் ஒரு **சிறுகதையினை** எழுதி முடிக்கவும்.

- Facebook

**KERTAS SOALAN TAMAT**